விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 119 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 04 திங்கட்கிழமை (17.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


## தமிழர்களின் மரபுரிமையை பாதுகாக்க வலியுறுத்தி

நல்லூரில் உண்ணாவிரத போராட்டம்



03

### பண்ணையில் உள்ள அம்மன் சிலையை அகற்றுவதா?

## நல்லை ஆதீனத்தில் இன்று அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் வீற்றிருக்கும் தீவகத்தின் நுழைவாயிலான யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு மீதான விசாரணை நாளைய தினம் (18.04.2023) யாழ்ப்பாண நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந் நிலையில் குறித்த அம்மன் 15

# அம்மன் சிலையை அகற்ற யாழ்.பொலிஸார் தீவிரம்

## நாளை நீதிமன்றில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பண்ணைச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்குக் கட்டளையிடுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணப் பொலிஸார் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.**



யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில் கடந்த 14ஆம் திகதி புத்தாண்டு தினத்தில் நாகபூசணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள தீவகத்தின் நுழைவாயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் 15

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அனைத்து அரச பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் இன்று ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், தேசிய பாடசாலைகளின் இடைநிலை வகுப்புகளுக்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல் தொடர்பிலான புதிய சுற்றறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி 15

## வவுனியாவில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா நையினாமடு பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த ராமலிங்கம் அனுசன் (வயது-23) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நெடுங்கேணி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் 15

## நாகபூசணி அம்மனை அகற்ற பொலிஸார் ஒட்டிய கட்டளை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நயினாதீவு நாகபூசணி அம்மனை குறிக்கும் நாகபூசணி அம்மனின் திருவுருவச் சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் தீவிரம் காட்டியுள்ளனர்.

நீதிமன்றின் கட்டளை என யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் ஒப்பமிடப்பட்ட அறிவித்தல் உருவச் சிலைக்கு அருகாமையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 15

## வயல் காவலுக்கு சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியாவில் சம்பவம்



(வவுனியா)

வவுனியாவில் வயல் காவலுக்கு சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புளியங்குளம் புதூர் பகுதியில் வசித்து வரும் 15

## நடப்பு அரசின் தோல்வி விரைவில் அம்பலமாகும்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நடப்பு அரசாங்கத்தின் தோல்வி விரைவில் அம்பலமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இந்த விடயத்தை 15

### வவுனியாவில்

## மாணவன் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா- வேப்பங்குளம், பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்து மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில், காயமடைந்த மாணவன் வவுனியா வைத்தியசாலையில் 15

## வடக்குக் கிழக்கை வாட்டும் வெயில்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் கடும் வறட்சி மற்றும் வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அடுத்த சில நாட்களில் சில பகுதிகளில் வழக்கத்திற்கு மாறாக வெப்பமான காலநிலை நிலவும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும் வவுனியா, கிளிநொச்சி, 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொடுமையானது - ஜனநாயக விரோதமானது

## சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம்

(கொழும்பு)

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொடுமையானது - ஜனநாயக விரோதமானது என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பத்திரிகை சுதந்திரத்தையும் கருத்து சுதந்திரத்தையும் கடுமையாக குறைக்கும் விதத்தில் காணப்படுகின்றது என சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையைச்சேர்ந்த தனது இணை அமைப்புகளுடன் சேர்ந்து உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு கடும் கண்டணத்தை வெளியிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் முன்மொழியப்பட்ட நகல்வடிவை மீளப்பெற வேண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் எனவும் வேண்டு கோள் விடுத்துள்ளது.

மார்ச் 17 ம் திகதி இலங்கையின் பயங்கரமான பயங்கரவாத தடைச்சட்டத்தை புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மூலம் மாற்றீடு செய்யும் நோக்கத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்தது என தெரிவித்துள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் உத்தேச சட்டமூலத்தை தொழிற்சங்கங்கள் மனித உரிமை அமைப்புகள் சிவில் சமூகத்தினர் சட்டத்துறையினர் ஊடக சுதந்திரத்திற்காக குரல் கொடுப்பவர்கள் என பலதரப்பட்டவர்கள் விமர்சித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளதுடன் இலங்கையில் தற்போது காணப்படும் ஸ்திரமின்மைக்கு மத்தியில் இந்த உத்தேச சட்டமூலத்திற்கு உடன்படமறுப்பவர்கள் சிவில் சமூகத்தினர் மீது ஒடுக்குமுறையை முன்னெடுப்பதற்கு பயன்படலாம் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சட்டமூலம் பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணங்களை சர்வதேச வழிகாட்டுதல்களிற்கு அப்பால் விஸ்தரிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்திற்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்துவது அத்தியாவசிய சேவைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துவது அரசாங்கத்தினால் சட்டவிரோதமானது என கருதப்படும் ஒன்றுகூடலில் பங்கேற்பது போன்றவற்றையும் சட்டமூலம் பயங்கரவாதத்துடன் சேர்க்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## காலியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் உயிரிழப்பு

(காலி)

காலி - தடல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 36 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இசை நிகழ்ச்சியொன்றை பார்த்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வந்த இருவரால் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த 18 வயதான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் நீண்ட காலமாக நிலவி வந்த முரண்பாடே துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கொலைச் சம்பவத்திற்காக பிஸ்டல் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## ராஜஸ்தான் வெற்றி




குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய குஜராத் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 177 ரன்கள் எடுத்தது.

பின்னர் ஆடிய ராஜஸ்தான் 19.2 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 179 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ராஜஸ்தான் அணியின் ஹெட்மெயர் தெரிவானார். (ம-7)

## மறுசீரமைப்புக்கள் வெற்றி பெற வெளிப்படைத் தன்மை அவசியம்

### உலக வங்கிக்கான தென்னாசிய தலைவர் வலியுறுத்து



பொருளாதார மீட்சிக்காக இலங்கை எடுத்துள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சிக்குரியது. சமூக கட்டமைப்பில் அவதானத்துக்குரிய தரப்பினரை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புக்கள் வெற்றி பெற வேண்டுமாயின், வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என உலக வங்கிக்கான தென்னாசிய தலைவர் மார்டின் ரேஸர், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடம் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் வொஷிங்டன் நகரில் இடம்பெறும் ஸ்ப்ரிங் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடல் தொடர்பில் உலக வங்கிக்கான தென்னாசிய தலைவர் மார்ட்டின் ரேஸர் டுவிட்டர் வலைத்தளத்தில் இவ்வாறு பதிவேற்றம் செய்துள்ளார். இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்களின் முன்னேற்றத்தன்மை மகிழ்ச்சிக்குரியது. சமூக கட்டமைப்பில் அவதானத்துக்குரிய தரப்பினரை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமாயின், வெளிப்படைத் தன்மை வெகுவாக பேணப்பட வேண்டும்.

பொருளாதார மீட்சிக்காக உலக வங்கி இலங்கைக்கு ஆலோசனை மற்றும் நிதி ஒத்துழைப்புக்களை தொடர்ந்து வழங்கும். புதுப்பிக்கத்தக்க வளங்கள், டிஜிட்டல் மற்றும் கல்வி மேம்பாடு உள்ளிட்ட முக்கிய துறைகள் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஸ்ப்ரிங் மாநாட்டுக்கு இணையாக உலக வங்கி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கோவிட் பெருந்தொற்று, பொருளாதார பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது. டிஜிட்டல் துறை சார்ந்த கற்கை நெறிகளுக்கு அதிக நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது என்று அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


உ
சிவமயம்



**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு**

**மலசலகூடங்கள் மீள்புனரமைப்புச் செய்வதற்கான கூறுவிலை கோரல்**

கோவிலில் அமைந்துள்ள **52** மலசலகூடங்களை மீள் புனரமைப்புச் செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினை விண்ணப்பிக்க விரும்புவோர் கோவில் காரியாலயத்தில் அதற்கான படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி **29.04.2023** ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி **"செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

**ந.மோகனரூபன்**
**செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு**

(C-6368)



**கடை வாடகைக்கு**

மானிப்பாய் வீதியில் (யாழ். அருகில்) கடை வாடகைக்கு உண்டு.

நீளம் - 37 அடி
அகலம் - 20 அடி

(15284)

**076 928 2587**



**விசா சம்பந்தமான ஆலோசனைகள்**

Uk நாட்டிற்கு வேலைவாய்ப்பு விசா தேவைப்படுபவர்களும் USA மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு Tour விசா தேவைப்படுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**HYBRID INTERNATIONAL HUB PVT LTD**

**076 250 0098**
**021 222 1265**

(C-6370)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம்’

# அடையாள உண்ணாநோன்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**“தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம்” எனும் தொனிப்பொருளில் அடையாள உண்ணாநோன்பு போராட்டம் நேற்று நடைபெற்றது.**





ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் அழைப்பு விடுக்கப்பட்ட குறித்த போராட்டம் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை இடம்பெற்றது.

தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் போராட்டத்தில்,

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.

நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2.குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதிசிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழுங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மைகளை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-33-104)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்து நீதித்துறையே முடிவு செய்ய வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க திறைசேரி த்வறியதால், உள்ளூராட்சித் தேர்தல் குறித்து நீதித்துறையே முடிவு செய்ய வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான திகதி நிச்சயமற்ற நிலையில் இருக்கும் அதேவேளை தம்மால் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் இருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பிரதமருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தேர்தலை நடத்துவது குறித்த எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி 25 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படாது என இரண்டாவது தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அனைத்து அரச நிறுவனங்களையும் அழைக்க கோப் குழு முடிவு

(கொழும்பு)

அனைத்து அரச நிறுவனங்களையும் அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி 420 அரச நிறுவனங்களுக்கு கோப் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களை வருடாந்தம் கோப் குழுவின் முன்னிலையில் அழைக்க வேண்டியிருந்தாலும் அது உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட 4 அரச நிறுவனங்கள் ஏப்ரல் மாதம் கோப் குழுவின் முன் அழைக்கப்படவுள்ளன.

அவற்றுள், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழு என்பன இவ்வருடம் ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக அவை மீள அழைக்கப்படவுள்ளன. (நி)

# குறையும் முட்டை விலை

(கொழும்பு)

முட்டையின் விலையை குறைப்பது தொடர்பில் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

முட்டை விலை உயர்வுக்கு நுகர்வோர் அதிகார சபையே காரணம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (நி)

சீனாவின் உதவியுடன்

# இலங்கையில் செய்மதித்தளம் மியன்மாரில் இராணுவத்தளம்

## *இந்து நாளிதழ் செய்தி வெளியீடு*

(டில்லி)

சீனாவின் உதவியுடன் இலங்கையில் ராடார் தளத்தை அமைப்பதற்கான முயற்சிகள் குறித்தும் மியன்மாரில் இராணுவத்தளமொன்றை அமைப்பதற்கு சீனா உதவுவது குறித்தும் இந்தியா அதீத கவனம் செலுத்தியுள்ளது என இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

மியன்மாரின் கொக்கோ தீவுகளில் இராணுவத்தளமொன்று உருவாக்கப்படுவதும் இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள தொலைதூர செயற்கை கோள் தரவுகளை பெறும் நிலையமும் பிராந்தியத்தில் சீனாவின் கண் காணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியாவிற்கு கவலை ஏற்படுத்தியுள்ளன என இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது. இராணுவத்தளமும் தொலைதூர செய்மதி நிலையமும் சீனாவின் உதவியுடனேயே நிர்மாணிக்கப்படுவ்தாக அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளிற்கு அருகில் உள்ள கொக்கோதீவுகளில் இராணுவதளமொன்று உருவாக்கப்படுவதை சமீபத்தைய செய்மதி படங்கள் காண்பித்துள்ளன என தெரிவித்துள்ள இந்து நாளிதழ் இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள தொலைதூர செய ற்கை கோள் தரவுகளை பெறும் நிலையமொன்றை உருவாக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் அக்கடமி ஒவ்சயன்சின் கீழ் உள்ள ஏரோஸ்பேஸ் இன்பேமே ர்சன் ரிசேர்ச் இன்ஸ்டியுட்டிற்கும் ருகுணு பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பின் கீழ் இந்த செயற்கைக் கோள் தளம் உருவாக்கப்படுகின்றது எனவும் இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதனை பயன்படுத்தி இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட வளங்களை வேவு பார்க்கலாம். பிராந்தியத்தில் தகவல்களை இடைமறித்து கேட்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்களை சேர்ந்தவர்கள் தெரிவித் துள்ளனர் என இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல கார் பந்தய வீரர் பயிற்சியின் போது உயிரிழப்பு

உலக கார் பந்தய சம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்ட கார் பந்தய வீரர், பயிற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குரோஷியாவில் நடைபெற்றும் வரும் உலக கார் பந்தய சம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்ட அயர்லாந்தை சேர்ந்த ஓட்டுநர் கிரேக் பிரீன் விபத்தில் உயிரிழந்த சம்பவம் அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி குரோஷியாவில் நடைபெற்றும் வரும் உலக ரேலி சம்பியன்ஷிப் போட்டிக்கு முந்தைய சோதனை ஓட்டத்தின் போது ஏற்பட்ட விபத்தில் கிரேக் பிரீன் உயிரிழந்ததாக ஹீண்டாய் மோட்டார் ஸ்போர்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

33 வயதான கிரேக் பிரீன் உலக சம்பியன்ஷிப் சீசனின் இரண்டாவது சுற்றுக்கு தயாராகிக்கொண்டிருந்தபோது,அவரது கார் சாலையில் சென்று ஒரு கம்பத்தில் மோதியது.

இந்த சம்பவத்தில் அவருடன் சென்ற சக ஓட்டுநர்



ஜேம்ஸ் ஃபுல்டன் உயிர் தப்பியுள்ளார்.

“கிரேக்கின் குடும்பம், நண்பர்கள் மற்றும் அவரது பல ரசிகர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. எங்கள் நிறுவனம் இந்த நேரத்தில் மேலும் எந்தக் கருத்தையும் தெரிவிக்காது" என ஹூண்டாய் மோட்டார்ஸ்போர்ட் அறிவித்துள்ளது.

பிரீன் பல ஆண்டுகளாக உலக சம்பியன்ஷிப்பில் அடிக்கடி போட்டியிட்டார. இருப்பினும் அவர் முதல் இடத்தைப் பிடிக்கவில்லை.

, ஆனாலும் அவர் ஆறு பேரணிகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். உலக அளவில் பெரிய ரசிகர் பட்டாளத்தை கொண்டுள்ள இவரது இழப்பு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (4)

## ‘விரைவில் குணம் பெற்று வாருங்கள்’

# எதிரணி கப்டனுக்காக மைதானத்தில் பதாகை ஏந்திய பாகிஸ்தான் ரசிகர்

நியூஸிலாந்து கப்டன் கேன் வில்லியம்சன் விரை வில் குணம்பெற்று வர வேண்டும் என பாகிஸ்தான் ரசிகர் பதாகை ஏந்திய சுவாரசிய நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி லாகூரில் நடந்தது. இந்தப் போட்டியில் நியூஸிலாந்தின் கேன் வில்லியம்சன் காயம் காரணமாக தொடரில் பங்கேற்காததால், அணியின் கப்டனாக டாம் லாதம் செயற்பட்டார்.

பாகிஸ்தான் அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. போட்டியின்போது பாகிஸ்தான் ரசிகர் ஒருவர் கேன் வில்லியம்சனின்




புகைப் படம் அடங்கிய பதாகையை ஏந்தி நின்றார்.

அதில் Get Well Soon Williamson என எழுதப்பட்டிருந்தது. கேன் வில்லியம்சன் அவர் நாட்டின் ரசிகர்கள் மட்டுமின்றி உல களவில் பல்வேறு நாடுக ளின் கிரிக்கெட் ரசிகர்களாலும் விரும்பப்படும் நபராக உள்ளார்.

அதற்கு உதாரணமாக இந்த நிகழ்வு அமைந்து ள்ளது பலருக்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# பார்சிலோனா ஓபன் டென்னிஸ் ரபேல் நடால் விலகல்

ஸ்பெயினின் பார்சி லோனா நகரில் அடுத்த வாரம் பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டி தொடங்கவுள்ளது. 22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ள ரபேல் நடால் இந்தப் போட்டியில் பங்கேற்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால், அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி முதலே காயம் கார ணமாக அவதிப்பட்டு வரும் நடால், இந்தப் போட்டியிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர் ஏற்கெனவே இண்டியன் வெல்ஸ், மியாமி, மான்டி



கார்லோ டென்னிஸ் போட்டிகளில் இருந்தும் காயம் காரணமாக விலகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2810


**கயேந்தினி**

அந்த சூரியனுக்கே Tuff குடுக்கிறவருடா இந்த கொத்தனாரு...




**திலானி**

கோடி கொடுத்து எதிர்பார்த்து வாங்கிற players சைலன்டா இருக்கிறப்போ



யாருமே எதிர்பார்க்காம நம்ம கூடவே இருக்கிறவன் match eh வென்று குடுக்கிற அந்த moment eh வேற லெவல்

**நமசியா**

இலங்கையில் இருந்து ஒரு இலட்சம் குரங்குகள் சீனாவிற்கு வழங்கப்படவுள்ளன. நியூஸ்



டேய் மாப்ள நீ சீனா போக நல்ல சந்தர்ப்பம் ஒன்று வந்திருக்கு..ஆமா மொத்த செலவையும் சீனாவே ஏத்துகுதாம்...

**கஜன்**

உயிரே ..உயிரே தப்பிச்சு எப்படியாச்சும் ஓடி விடு




வருதே... அய்யய்போ... வெயில் வருதே....

**வேதியன்**

என்னதான் வாழ்க்கையை
எட்டு எட்டா பிரிச்சு
வாழ்ந்தாலும்
ஒவ்வொரு எட்டுக்குள்ளும்
ஒரு ஏழரை இருப்பது
நிச்சயம்...?

**ரம்மியா**

கரும்பு நட்டேன் விற்கவில்லை
கம்பு நட்டேன் விற்கவில்லை
நெல் நட்டேன் விற்கவில்லை
கடைசியில் கல் நட்டேன் விற்றுவிட்டது



விவசாயி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போதுமான நீரை அருந்துங்கள்

# இன்னும் சில நாட்களுக்கு வெப்பமான காலநிலை தொடரும்

## வளிமண்டல திணைக்களம்

(கொழும்பு)

நாட்டின் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் கொழும்பு, கம்பஹா, குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளிலும் அதிக வெப்பமான காலநிலை நிகழும்.

குறித்த மாகாணங்களில் மனிதர்களால் உணரப்படும் வெப்பம் அவதானம் செலுத்தப்படும் மட்டத்தில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வெப்பமான காலநிலை சில நாட்களுக்கு தொடரும். இந்நிலையில் இந்த காலகட்டத்தில் நீரிழப்பு போன்ற நிலைமைகள் ஏற்படலாம். வெப்பமான காலநிலை நிலவும் இடங்களில் வேலை செய்பவர்கள் போதுமான நீரை அருந்த வேண்டும்.

மேலும் முடிந்தளவு நிழலில் ஓய்வெடுக்க வேண்டும். வயதானவர்கள் மற்றும் நோய் வாய்ப்பட்டவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும்.

வாகனங்களில் செல்பவர்கள் சிறு குழந்தைகளை தனியாக வாகனங்களில் விட்டு செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய நாட்களில் வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெப்பமான காலநிலை காரணமாக கால்நடைகள் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிலவும் அதிக வெப்பமான காலநிலை காரணமாக விலங்குகளுக்கான தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

இதன்போது போதுமான நீரினை கால்நடைகளுக்கு வழங்கப்பட வேண்டும். மேலும் அவற்றை மூடப்பட்ட கூடாரங்களில் நிறுத்த வேண்டும் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# தமிழ் மக்களை மத ரீதியாக பிளவுபடுத்த முயற்சி

## கஜேந்திரன் எம்.பி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் வேறுபாடுகளை களைந்து ஓர் இன்மாக தமது விடுதலை பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.


ஆனால், தற்பொழுது தமிழர்களை மத ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அன்னை பூபதியின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊர்தி பவனி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது பௌத்த மயமாக்கலும் சிங்கள மயமாக்கலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமானால் தமிழ் மக்களின் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன், ஒற்றை ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும் எனவும், தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அனுபவிக்கக்கூடிய வகையிலான சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# யாழில் இருந்து மட்டக்களப்பு நோக்கி அன்னை பூபதியின் ஊர்திப் பவனி



(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊர்தி பவனியானது நேற்று நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்திலிருந்து நண்பகல் 1.30 மணியளவில் ஆரம்பித்தது.

இவ் ஆரம்ப நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், கஜேந்திரன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து அஞ்சலியினை செலுத்தியிருந்தனர்.

இதேவேளை நல்லை ஆதீன முன்றலில் தமிழர் தொன்மையைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் போராட்டம் இடம்பெற்ற இடத்தை நோக்கி நகர்ந்த ஊர்திக்கு போராட்டத்தில் ஈடுபட்ட மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் போன்றோர் அஞ்சலியைச் செலுத்தியிருந்தனர்.



தொடர்ந்து நகரும் ஊர்தி பவனியானது கிளிநொச்சியைச் சென்றடைந்து, அங்கிருந்து மாங்குளம் மல்லாவியூடாக நெடுங்கேணியை அடைந்து, அங்கிருந்து திருகோணமலையூடாக மட்டக்களப்பிலுள்ள அன்னை பூபதியின் நினைவிடத்தை நாளை மறுதினம் புதன்கிழமை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

# இராசிபலன்

17.04.2023
சித்திரை 04 , திங்கட்கிழமை
துவாதசி பிற்பகல் 3.18 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.08 மணிவரை
சுபநேரம் -12.04- 1.34 மணிவரை
இராகுகாலம்- 7.34-9.04 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-
ஆயிலியம்.

வளவன்

**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்**
எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்,வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மகரம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, காணாமல் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள் , போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**கும்பம்**
உறவினர்கள் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**
வழிபாடு மகத்துவம் தரும்,பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பயணங்கள் கைகூடும்.

**கன்னி**
கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தேக நலனில் முன்னேற்றம் காணும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மீனம்**
தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மம் ஒன்றுதான் இறந்த பிறகும் வாழ்கிறது.

# பயங்கரவாத தடைச்சட்டம் விவாதத்திற்கு வரும்போது மகிந்த குடும்பம் சிறை செல்லும் நிலை ஏற்படலாம்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கண்டாவளை)

**பயங்கரவாத தடைச் சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது விவாதத்திற்கு வரும் போது பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள மகிந்த குடும்பமே அதற்குள் சிக்கி சிறை செல்லும் நிலையேற்படலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில், அடுத்தடுத்த வாரங்களில் மிக மிக ஆபத்தான பயங்கரவாத தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்தற்கு கொண்டு வரப்படும் போது அது விவாதத்திற்கு விடப்படும் அவ்வாறான நிலையில் அதற்கான பெரும்பான்மை தேவையாகும்.

இந்த நிலையில் இப்போது பெரும்பான்மை வாக்குகளை அளிக்கக்கூடிய மகிந்த ராஜபக்ஷ குடும்பமே இந்த சட்டத்துக்குள் அகப்பட்டு சிறை செல்லும் நிலை ஏற்படலாம்.

ஏற்கனவே ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் பாராளுமன்றத்தில் பயங்கரவாத தடை சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை வைத்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை கொன்று குவித்தும் தள்ளியுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ள எதிர்கால சிந்தனை வேறு மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திடம் உள்ள எதிர்கால சிந்தனைகள் வேறு. அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டால் இந்த சட்டத்தை பயன்படுத்த கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ரணில் தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

அவ்வாறான முயற்சிகளில் எந்த ஒரு தேர்தலையும் தற்போது நடத்துவதற்கு அவர் தயாராக இல்லை.

ஏற்கனவே இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் மிக மிக ஆபத்தான சட்டமாகவே இப் புதிய சட்டம் உள்ளது.

தனிநபர் கருத்து சுதந்திரம், ஊடக சுதந்திரம் எதுவும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-315)

# யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கு இடையில் நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முகமாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ் சித்திரை புத்தாண்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் செயலகம் 51 ஆவது காலால் படைப்பிரிவு, மாவட்டச் செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல், கோலம் போடுதல், தயிர் முட்டி அடித்தல் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றதுடன் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்.மாநகர ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் பிரதானி பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-104-33)



இணுவில் கந்தன் அறக்கட்டளையும் நந்தாவில் நீங்காமூலை காளியாச்சி அறக்கட்டளையும் ஒருங்கிணைந்து இணுவில் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், கோண்டாவில் ஆதார மருத்துவமனைக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், பொருளாதாரத்தில் பின் தங்கிய, தந்தையை இழந்த பல்கலைக்கழக மாணவிகளுக்கு மடிக்கணினிகள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. (படம்:-கஜிந்தன்)

# கொடிகாமத்தில் இடம்பெற்ற புளொட் அமைப்பின் மக்கள் சந்திப்பு

(சாவகச்சேரி)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மக்கள் சந்திப்பு அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்றிருந்தது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்களை சந்தித்திருந்தனர். (நி-30)



தென்மராட்சி-தனங்கிளப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் சாவகச்சேரிப் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை தனங்கிளப்பு ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன கலந்து சிறப்பித்திருந்தார். (படம்:-சுபேசன்)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் சுமார் 62 கிலோ கஞ்சா மீட்பு

## மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு மேற்கே இலங்கை கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 62 கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவை ஏற்றிச் சென்ற இந்திய கப்பல் ஒன்றை கடற்படையினர் தடுத்து நிறுத்தி 3 சந்தேகநபர்களை கைது செய்தனர்.



இலங்கை தீவுக்குள் போதைப்பொருள் ஊடுருவலைத் தடுக்கும் நோக்கில், இலங்கை கடற்படையினர், தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பகுதியில் இந்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது போது சந்தேகத்திற்கிடமான இந்திய கப்பல் காணப்பட்டது. அதிலிருந்த 62 கிலோ 400 கிராம் எடையுள்ள 23 பொதிகளில் இருந்த கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர். இந்த நடவடிக்கையானது சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு ரூ. 20 மில்லியன்.

3 சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (நி-104)

தென்மராட்சி-மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவங்களில் சேவை புரிந்த தொண்டர் அணியினருக்கு ஆலய சமூகம் மற்றும் இந்து இளைஞர் மன்றம் ஆகியன சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்திருந்தன.

இதன்போது ஆலயத்தில் ஒழுங்குபடுத்தல் பணி,வீதி ஒழுங்கு,முதலுதவி மற்றும் [illegible] நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கை [illegible] இந்துசமய தொண்டர் சபையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சாரணர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.



(படம்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 ஆயிரம் ஆடுகளை இலவசமாக வழங்கவுள்ள விவசாய அமைச்சு

(கொழும்பு)

**ஆடுகளை வளர்க்க விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கு 70, 000 ஆடுகளை இந்த வருடத்திற்குள் இலவசமாக வழங்கவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

அதன்படி, வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கும் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கும் அந்த ஆடுகள் வழங்கப்படவுள்ளன.

தேவையான தொழில் நுட்பம் மற்றும் உயர்தரமான ஆடுகளை வழங்குவதற்கும் தனியார் துறையின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கும் தமது அமைச்சு செயற்பட்டு வருவதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஜம்னாரி, கொட்டுகச்சி, போயர் மற்றும் சானன் போன்ற உயர்தரமான ஆடுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# பிஸ்கட் உற்பத்திக்கு பயன்படும் புதிய அரிசி வகை அறிமுகம்

(கொழும்பு)

பிஸ்கட் உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய பி.ஜி. 381 என்ற புதிய அரிசி வகையை பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது என பத்தலகொட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.பி.சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறு கையில்,

"பத்தலகொட அரிசி ஆராய்ச்சி நிறுவனம் இந்த அரிசி வகையை கண்டுபிடித்திருப்பது ஒரு சாதனை.

இந்த நெல் ரகம் ஓரளவு மகசூல் தரக்கூடியது. ஏக்கருக்கு நான்கு மெற்றிக் தொன் மகசூல் தருகிறது. வறண்ட பிரதேசத்திற்கு இந்த நெல் வகை பொருத்தமானது.

இதுவரை பிஸ்கட் உற்பத்திக்கு தேவையான அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த அரிசி வகையை பிஸ்கட் தொழில் துறையில் அதிக வெற்றிகரமான முறையில் பயன்படுத்த முடியும் என தெரிவித்துள்ளார். (நி)

## புத்தாண்டு தினத்தன்று

# அதிவேக நெடுஞ்சாலையின் வருமானம் 35 மில்லியன்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் நேற்று முன்தினம் 35 மில்லியன் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

புத்தாண்டைக் கொண்டாடுவதற்கும் பொழுதுபோக்கிற்காகவும் வெளி மாறிலங்களுக்குச் செல்வதற்காக அதிக எண்ணிக்கையிலான மக்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாகவே வருமானம் அதிகரித்துள்ளது என்றும் நேற்று முன்தினம் மட்டும் அதிவேக நெடுஞ்சாலைகளை 126,760 வாகனங்கள் கடந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளது. (நி)

# அடுத்த மின் கட்டண திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி- காஞ்சன



(கொழும்பு)

செலவுக்கு ஏற்ற மின் கட்டண திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், கட்டண திருத்தத்தின் மூலம் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

வருடத்திற்கு இரண்டு தடவைகள் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டணத்தை மாற்ற முடியும்.

ஜூலை மாத நிலவரத்தின் அடிப்படையில் அடுத்த கட்டணத் திருத்தம் தீர்மானிக்கப்படும்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின் கட்டணத்தை குறைத்து சலுகையை வழங்க முடியுமா என்பது குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# உணவுப் பொருட்களின் விலை மீண்டும் உயரும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் அரிசி, சீனி மற்றும் பருப்பு போன்றவற்றின் விலைகள் உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் உயர்வடைவதனால் இவ்வாறு பொருட்களின் விலைகள் உயரும் என தெரிவிக்கப்படுகின்றது.

கொள்கலன் போக்குவரத்து தொடர்பில் நிர்ணயிக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனால் கொள்கலன் போக்குவரத்து நிறுவனங்கள் தன்னிச்சையாக கட்டணங்களை நிர்ணயம் செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது. அன்றாடம் நுகரும் சீனி, அரிசி மற்றும் பருப்பு போன்ற பொருட்களின் விலைகளில் இந்த போக்குவரத்து கட்டணங்கள் தாக்கம் செலுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதியாளர்கள் உள்ளிட்ட உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாது வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்தமையினால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாக சீனி இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் ஜீ.எம். அபேசேகர தெரிவித்துள்ளார். (நி)





## பதவி வெற்றிடம்

- தமிழ் ரைப்பிங்/ பக்க வடிவமைப்பாளர்
  அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்
  (பெண்கள்)
- இயந்திர இயக்குநர்/பயிலுநர்
  (ஆண்கள்/ இரவுக் கடமை - கல்வித் தகைமை -க.பொ.த சாதாரண தரம் )

பதவி வெற்றிடங்களுக்கான வயதெல்லை -25 இற்கு மேல்

யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு- 076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அரசபடை துணை இராணுவம் சூடானில் மோதல்

### 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(கார்டோம்)

சூடானில் இராணுவத்திற்கும் துணை இராணுவ குழுவொன்றிற்கும் இடையில் மூண்டுள்ள மோதலில் சிக்கி 70 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.



சூடான் தலைநகர் கார்டோமில் துப்பாக்கி பிரயோக சத்தங்கள் கேட்பதாகவும் ஜனாதிபதி மாளிகை அரச தொலைக்காட்சி கட்டடம் இராணுவ தலைமையகம் போன்ற பகுதிகளில் மோதல்கள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகரில் பொதுமக்கள் உட்பட 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரத்தை பொது மக்களிடம் கையளிப்பது தொடர்பான கருத்து வேறுபாடுகள் காரணமாகவே மோதல்கள் மூண்டுள்ளன.

2021 இல் இடம்பெற்ற சதிப்புரட்சிக்கு பின்னர் சூடானை இராணுவ அதிகாரிகள் குழுவொன்று நிர்வாகம் செய்கின்றது.

இதில் இடம்பெற்றுள்ள இரண்டு இராணுவ அதிகாரிகளே தற்போதைய வன்முறைகளிற்கு காரணமாக உள்ளனர்.

இராணுவ தலைவரான ஜெனரல் அப்தெல் பட்டா அல் புர்கான் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார்.

சூடானின் துணை ஜனாதிபதியாக முகமட் ஹம்டான் டகலோ பதவி வகிக்கின்றார். இவர் ஆர்எஸ்எவ் துணை இராணுவகுழுவின் தலைவர்.

நாடு சென்றுகொண்டிருக்கும் திசை மற்றும் பொது மக்களிடம் ஆட்சியை வழங்குவது போன்ற விடயங்கள் குறித்து இருவர் மத்தியிலும் கருத்து வேறுபாடு காணப்படுகின்றன. (நி)

## 'மிஸ் இந்தியா' கிரீடம் சூடிய நந்தினி குப்தா



(டில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த 19 வயதான நந்தினி குப்தா 'மிஸ் இந்தியா 2023' பட்டத்தை வென்றுள்ளார்.

அடுத்த மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற உள்ள உலக அழகிக்கான போட்டியில் நந்தினி, இந்தியா சார்பில் பங்கேற்பார். அதற்கு தகுதியை அவர் இப்போது பெற்றுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தின் கோட்டா பகுதியை சேர்ந்தவர் நந்தினி. லாலா லாஜ்பத்ராய் கல்லூரியில் வணிக மேலாண்மை படித்து வருகிறார். தனது அழகு மற்றும் ஆளுமையின் மூலம் மிஸ் இந்தியா பட்டத்தை அவர் வென்றுள்ளார்.

வாழ்வில் எழுகின்ற சவாலை கற்றலுக்கான வாய்ப்புகளாக கருதி தான் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஜப்பான் பிரதமரை இலக்கு வைத்து குண்டுத்தாக்குதல் - மயிரிழையில் தப்பினார்



(டோக்கியோ)

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா மேடையில் பேசிக் கொண்டிருந்த வேளை குண்டு வெடித்ததையடுத்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

வகாயாமா மாகாணத்தில் உள்ள சைகாசாகி மீன்பிடி துறைமுகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் பிரதமருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடித்ததால் அப்பகுதியில் புகை மூட்டம் சூழ்ந்தது. இச்சம்பவத்தில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா பத்திரமாக மீட்கப்பட்டார். இதையடுத்து பிரதமரை பத்திரமாக பாதுகாப்பு வீரர்கள் வெளியேற்றினர்.

சம்பவம் தொடர்பில் இருபது முதல் முப்பத்தேழு வயதுக்கு இடைப்பட்ட நபர் ஒருவரை ஜப்பானிய பாதுகாப்புப் படையினர் கைது செய்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்ததையடுத்து தற்போது பிரதமர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் குண்டு வீசப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## மீண்டும் உலகை

### லண்டனில் உ

(லண்டன்)

அடுத்த தசாப்தத்தில் கொவி

ஏனெனில் சமீப காலமாக வை

நிறுவனம் ஆய்வு செய்து தகவ

விரைவான முறையில் தடுப்பூசிகள் பயன்படுத்துவதன் மூலம் பாதிப்புகளை குறைத்து இறப்புகளைக் குறைப்பதற்கான வாய்ப்புள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

பருவநிலை மாற்றம், சர்வதேச பயணத்தின் வளர்ச்சி, அதிகரித்து வரும் மக்கள்தொகை மற்றும் ஜூனோடிக் நோய்களால் ஏற்படும் அச்சுறுத்தல் ஆகியவை ஆபத்திற்கு பங்களிக்கின்றன.

ஆனால் புதிய நோய்க்கிருமி பரவல் கண்டுபிடிக்கப்பட்ட 100 நாட்களுக்குப் பிறகு பயனுள்ள

## மரப்படகில் மலேசிய

### 119 ரோஹிங்கியா அகதிக

(மலேசியா)

பங்களாதேஷில் இருந்து மரப்படகின் முலம் மலேசியாவுக்கு செல்ல முயன்ற 119 ரோஹிங்கியா அகதிகளை பங்களாதேஷ் கடலோர காவல்படை மீட்டுள்ளது.

பங்களாதேஷின் சைன்ட் மார்ட்டின் தீவு அருகே வங்காள விரிகுடா கடல் பகுதியிலிருந்து இப்படகு மீட்கப்பட்டுள்ளதாக கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.



## அணுஆயுத சோதனை

### சர்வதேசத்தின் வலுவான பதி

### வடகொரியாவுக்கு

(சீயோல்)

வடகொரியாவிடமிருந்து அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஜப்பான், தென்கொரியா மற்றும் அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளன.

மேலும் வடகொரியாவின் முதல் திட எரிபொருள் கண்டம் விட்டு கண்டம்பாயும் ஏவுகணை பரிசோதனைக்கு அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஏவுகணை பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு பயிற்சிகளை மேற்கொள்வது குறித்து மூன்று நாடுகளின் பாதுகாப்பு அதிகா ரிகளும் கலந்துரையாடியுள்ளனர்.

வோஷிங்டன், டிசியில் 13 ஆவது பாதுகாப்பு முத்தரப்பு பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான அணுசக்தி, ஏவுகணைப் பரிசோதனை மற்றும் சட்டவிரோத கடல்வழி நடவடிக்கை உட்பட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# க அச்சுறுத்தப் போகும் புதிய தொற்று!

## உள்ள நிறுவனம் ஆய்வில் தகவல்

**விட்-19 போன்ற கொடிய தொற்றுநோய் ஏற்படுவதற்கு 27.5% வாய்ப்பு உள்ளது.**

**வரஸ்கள் அடிக்கடி வெளிவருகின்றன என லண்டனைச் சேர்ந்த Airfinity Ltd என்ற கவலை வெளியிட்டுள்ளது.**

தடுப்பூசிகள் வெளியிடப்பட்டால் கொடிய தொற்றுநோய் 8.1% ஆக குறைகிறது.

உலக மக்கள் இப்போது கொவிட் - 19 உடன் வாழ்ந்து வருவதால், அடுத்த சாத்தியமான உலகளாவிய பெருந்தொற்று அச்சுறுத்தலுக்கு சுகாதார வல்லுநர்கள் தயாராகி தங்கள் கவனத்தைத் திருப்புகின்றனர்.

H5N1 பறவைக் காய்ச்சல் வேகமான பரவல் ஏற்கனவே கவலையை தருகிறது. இதுவரை ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இது மனிதனிலிருந்து மனிதனுக்கு பரவுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

அதேவேளை, பறவைகளின் விகிதங்கள் மற்றும் பாலூட்டிகளின் ஊடுருவல் அதிகரிப்பு ஆகியவை விஞ்ஞானிகள் மற்றும் அரசுகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இது வைரஸ் பரவுவதை எளிதாக்கும் வழியாக மாறலாம்.

தற்போதைய கண்காணிப்பு முறைகள் போதுமானதாக இல்லை.

எனவே, தயார் நிலைக்கு வர வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என ஆய்வு தெரிவிக்கிறது. (நி)

## யா செல்ல முயன்ற திகள் பொலிஸாரால் மீட்பு



உள்ளூர் மீனவர் வழங்கிய தகவலை தொடர்ந்து படகு இருந்த பகுதிக்கு சென்ற கடலோர காவல்படை 58 பெண்கள், 14 குழந்தைகள் உட்பட என 119 பேரை மீட்டுள்ளனர்.

கடந்த மூன்றரை மாத காலத்தில் கடல் வழியாக செல்ல முயன்ற 500 இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகளை பங்களாதேஷ் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விண்வெளியில் விளைந்த தக்காளி பிரத்தியேக விண்கலம் மூலம் பூமிக்கு

### நாசா அறிவிப்பு



(வோஷிங்டன்)

விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி பிரத்தியேக விண்கலம் மூலம் பூமிக்கு கொண்டு வரப்படுவதாக அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா தெரிவித்துள்ளது.


கடந்த ஆண்டு நிலவில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரி கொண்டு விண்வெளியில் தக்காளி உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்பட்டது என்றும் நாசா மற்றும் ப்ளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளியை சிறப்பு விண்கலம் மூலம் பூமிக்கு கொண்டு வர இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது.

சுமார் 100 நாட்களுக்கு மேல் நான்கு விண்வெளியில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது என்றும் 100 நாட்களில் அந்த தக்காளி அறுவடை செய்யப்பட்டுள்ளதாகவும் நாசா தெரிவித்துள்ளது. (நி)

## மேற்கொள்ளப்பட்டால் திலை எதிர்கொள்ள நேரிடும்

### எச்சரிக்கை விடுப்பு



கொரியா மீறி வருகின்றது.

உடனடியாக இத்தகைய சீர்குலைக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அணு ஆயுத சோதனை நடத்தப்பட்டால், சர்வதேச சமூகத்தின் வலுவான பதிலை எதிர்கொள்ள நேரிடும்' என்றும் வடகொரியாவுக்கு எச்சரிக்கை [illegible]ளது.

## 2024 ஆம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்

### அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலர்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ, அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட இது சந்தர்ப்பம் அல்ல என முன்னாள் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அடுத்த தேர்தலில் போட்டியிடுகிறார் என்றும் ட்ரம்ப் பதவியில் இருந்த போது 2018 முதல் 2021 வரை அமெரிக்க இராஜாங்க செயலாளராக பாம்பியோ பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், கடந்த சில நாட்களுக்கு முன்பு, மைக் பொம்பியோ ட்ரம்பின் கொள்கைகளை விமர்சித்து கருத்துகளை வெளியிட்டதுடன், தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆலோசித்து வருவதாகவும் கூறியிருந்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகர் ஆலய சந்தாப்பணம் புதுப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் நானாவிதம் 39/16 21.12.2021 ஆம் திகதிய கட்டளைக்கு அமைவாகவும் கௌரவ மன்றின் ஆளை 39/2016 வழக்கிலக்க 30.12.2022 ஆம் திகதிய அறிவித்தலுக்கு அமைவாகவும் தர்மகர்த்தா சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தில் ஏற்கனவே உள்ள சாதாரண அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தினை அங்கத்துவப் பட்டியலில் உள்ளவாறு புதுப்பிப்பதற்கு ஏதுவாக, 26.04,2023 ஆம் திகதி தொடக்கம் 02.05.2023 ஆம் திகதி வரை (காலை 9.30 முதல் நண்பகல் 1.00 மணி வரை) ஆலய அன்னதான மண்டபத்தில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களிடம் தேசிய அடையாள அட்டையுடன் நேரடியாக வந்து சாதாரண அங்கத்தவர்கள் தங்களது வருட சந்தாவினை (2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை) செலுத்துவதன் மூலம் தாங்கள் வாக்களிக்கும் உரிமையினை பெற்றுக் கொள்ளலாம் என சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டி

## 35 ஜோடி காளைகள் பங்கேற்பு

(மன்னார்)

புத்தாண்டையொட்டி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார் பரப்பாங்கண்டல் இரட்டை மாட்டு வண்டித் திடலில் இடம் பெற்றது.



மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 35 ஜோடி காளைகள் குறித்த போட்டியில் கலந்து கொண்டிருந்தன.

குறித்த போட்டியானது A,B,C,D,E ஆகிய 5 பிரிவுகளில் இடம்பெற்றது.

இதன் போது குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (நி-285)

# 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கான முடிந்த முடிவும் அல்ல ; சரியான தீர்வும் அல்ல

## சித்தார்த்தன் எம்.பி

(சாவகச்சேரி)

13 ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான ஒரு முடிந்த முடிவும் அல்ல, சரியான தீர்வும் அல்லவென பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் கடந்த காலங்களில் நாம் ஓர் கட்டமைப்பாக இணைந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றுக்கு கடிதங்களை எழுதி வந்தோம்.

குறிப்பாக 13வது சீர்திருத்தம் தொடர்பாக அடிக்கடி கடிதங்களை எழுதினோம்.

13வது திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இன்று இருக்கும் நிலைமையில் அதனை அமுல்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

அதனையும் விட்டுவிட்டால் எதுவுமே இல்லாமல் போய் விடும்.

13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் இல்லாமல் செய்வதனை நாம் தடுத்தே ஆக வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கங்களுக்கும் அந்த விருப்பம் காணப்படுகிறது.

இதை இல்லாமல் செய்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். எனவே தான் நாம் பாரத பிரதமரிடம் கேட்க வேண்டிய நிலைமை வந்தது. அவர்கள் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என விரும்பினோம்.

அவர்களும் அந்த அழுத்த்தை கொடுத்தார்கள். ஆகவே தான் இன்றும் 13வது திருத்தம் அரசியலமைப்பில் இருந்து கொண்டு இருக்கின்றது.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கான ஒரு முடிந்த முடிவும் அல்ல. சரியான தீர்வும் அல்ல.அது ஏமக்கு நன்றாக தெரியும்.இது எந்த விதத்திலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாது. ஆனால் இருக்கின்ற ஒரே ஒரு அதிகாரப் பகிர்வு இது தான். இதனையே தர மறுக்கிறார்கள் இந்த அரசாங்கங்கள்.

தமிழ் மக்கள் 70 வருடங்களாக விரும்பிக் கேட்கும் சமஷ்டியை அடையும் வரை யாவது எமது நிலங்கள் பறிபோகாமல் இருக்க வேண்டும்.

ஒரு மாகாணசபை செயற்பட்டிருந்தால் கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைத்தீவில் பறிபோய்க்கொண்டிருக்கும் நிலங்களை தடுத்து வைத்திருந்திருக்க முடியும்.எனவே தான் 13 ஆவது திருத்தச்சட்டம் வேண்டும் எனக் கேட்கிறோம் என அவர் சுட்டிக்காட்டினார். (நி-30)

# யாழ்.போதனா மருத்துவமனைக்கு தேவையான மருந்துகள் கிடைத்துள்ளன

## பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு



(அராலி)

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு தற்போது பூரணமாக நீங்கி உள்ளது என யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்தார்.

நேற்று போதனா மருத்துவமனையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இதனால் நாங்கள் மருத்துவ சேவையை செவ்வனே செய்யக் கூடியதாக உள்ளது. இப்போது வெப்பமான காலநிலை நிலவுவதால் நோயாளிகள் உட்பட அனைவரும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. எனவே சூரியன் எமது பிரதேசத்தில் உச்சம் கொடுப்பதால் மத்தியான நேரங்களில் வெளிப்பயணங்களை தவிர்ப்பது நல்லது.

போதிய அளவு நீராகாரங்கள் அருந்த வேண்டும். குறிப்பாக ஒருவர் ஒரு நாளைக்கு 2-3 லீற்றர் அளவு நீரை அருந்துதல் வேண்டும். நீர்த் தன்மையுள்ள பழங்களான வெள்ளரிப்பழம், கெக்கரி போன்றவற்றை உண்ண வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-104)

# வரணி மதிஒளி விளையாட்டுக் கழக மைதானம் திறப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி மதிஒளி விளையாட்டுக் கழகத்தின் மைதானத் திறப்பு விழா நிகழ்வும் விளையாட்டு நிகழ்வுகளும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

விளையாட்டுக் கழகத் தலைவர் இ.கோகுலன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட மைதானத்தை திறந்து வைக்கவுள்ளார். (நி-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 360 | 320 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 150 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 180 | 160 | 120 | 250 |
| கரட் | 160 | 200 | 200 | 300 |
| பூசணி | 60 | 70 | 60 | 50 |
| புடோல் | 150 | 120 | 160 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 170 | 140 | 120 | 130 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 300 |
| வெண்டக்காய் | 250 | 250 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 240 | 300 | 400 |
| பீற்றூட் | 200 | 180 | 160 | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 700 | 1000 |
| போஞ்சி | 250 | 300 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 320 | 380 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 280 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 350 | 280 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 480 |
| முள்ளங்கி | 60 | 80 | — | 240 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 140 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | — | — | 180 |



கணபதி அறக் கட்டளை அனுசரணையாளர் வைரவநாதன் ஆனந்தராசாவின் பிறந்தநாளை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை அவரின் குடும்பத்தினர் வழங்கிய 60,000 ரூபாய் நிதியுதவியில் இருந்து வாழ்வாதார உதவிக்காக [illegible]மொன்றிற்கு [illegible] வழங்கி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



**விலகிச் சென்றவர்களையும் விரும்பி அழைத்துக்கொள்ளும் மிதுன இராசி வாசகர்களே!**

கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் உங்களுக்கு இந்த சோபகிருது ஆண்டில் அஷ்டமத்துச் சனி விலகி பலன் கொடுக்கும் விதத்திலேயே ஆரம்ப கிரக நிலை அமைகின்றது. அதுவே மிகப்பெரிய யோகம் தான். கடந்த சில வருடங்களாக "தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல நேரம் தொடங்கி விட்டது. பகையான நட்புகள் உறவாகும். பண வரவு உச்சம் பெறும். தொழில் வெற்றி நடைபோட புதிய கூட்டாளிகள் வந்திணைவர். உத்தியோக மாற்றங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் விதம் அமையும். ஆண்டின் தொடக்கத்தில்

கூட்டும். இல்லையேல் பிரச்சினைகளைச் சந்திக்கும் விதத்திலும், பிறரை பகைத்துக் கொள்ளும் விதத்திலும் வாழ்க்கை அமையும். சுய ஜாதகத்தில் பாக்கியாதிபதியின் பலமறிந்து அதற்குரிய தெய்வத்தை தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவது நல்லது.

### குருப்பெயர்ச்சி!

சித்திரை 9 ஆம் திகதி மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவரது பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும். நீண்ட கால எதிர்பார்ப்புகள் நிறைவேறத் தொடங்கும். வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு பார்வை பதிவதால் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். பணியாளர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். நீங்கள் செய்யும் வர்த்தகம் எதுவாக இருந்தாலும் அது மனதிற்கு பிடித்தவிதமே அமையும். திருமணத் தடை அகலும். உத்தியோகத் தைப் பொறுத்தவரை உங்களுக்குத் தொல்லை தந்த மேலதிகாரிகள் மாற்றப்படலாம். சுறுசுறுப்போடு செயற்பட்டு சுற்றத்தார் மதிக்கும் விதத்தில் வாழ்க்கையை

மிகமிக கவனமுடன் இருக்க வேண்டும். குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் அலைக்கழிப்பால் இனிமை தராத இடத்திற்கு மாற்றப்படுவீர்கள். உறவினர்களால் உதாசீனம் உருவா




காமல் பார்த்துக் கொள்ளுங்கள். கும்பத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். வெளி நாட்டு முயற்சியில் தடை ஏற்படும். விலை உயர்ந்த பொருட்களை கையாளும் பொழுது கவனம் தேவை. வீடு மாற்றங்கள் ஏற்படலாம்.

### ராகு-கேது பெயர்ச்சி!

8.10.2023 அன்று மீன இராசியில் இராகுவும், கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள்.

புத்தாண்டு முழுவதும் சந்தோஷங்களைச் சந்திக்க பௌர்ணமி தோறும் விரதமிருந்து கவசம் பாடி லட்சுமியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்!

புத்தாண்டில் தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் அதிகரிக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். பெண்களுக்குப் பிறந்த வீட்டிலிருந்து உதவி கிடைக்கும். பிள்ளைகளின் சுபகாரியங்கள் முடிவிற்கு வரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வாக்குவாதத்தோடு இருந்த வாழ்க்கை இனி ஆக்கபூர்வமாக அமையும். சனியின் வக்கிர காலத்திலும், மகரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுதும் பணிச்சுமையும், பண விரயமும் அதிகரிக்கும். தவிர்க்க முடியாத விரயங்களால் தடுமாற்றங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், எதிர்பார்த்த இடமாற்றமும் உண்டு.

### குரு-சனியின் வக்கிரம்!

12.9.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலம் உங்களுக்கு

# உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உங்கள் இராசிநாதன் புதன் இலாப ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். முத்தான இடமான 10 ஆம் இடத்தில் குரு பகவான் பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். பாக்கிய ஸ்தானத்தில் பாக்கியாதிபதி சனி வீற்றிருக்கின்றார். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 24.8.2023 இல் மகர இராசிக்கு சென்று வக்கிரம் பெறுகிறார். அங்கிருந்து 20.12.2023 இல் கும்ப இராசிக்கு சனி செல்கின்றார். குரு பகவான் 22.4.2023 இல் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாபஸ்தானத்திற்கு வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் மூன்று முறை சனியைப் பார்ப்பதன் மூலமாக அக்காலங்களில் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். வியாபாரம், தொழிலில் கவனத்தோடு இருக்க வேண்டும். மறைமுக சூழ்ச்சிகளை எதிர் கொள்ள நேரிடும். உங்கள் மீது உண்மையான அக்கறை கொள்பவர்கள் கூட மனம் மாறிவிடுவர். சங்கிலித் தொடர்போல கடன் சுமை அதிகரிக்கும். 8.10.2023 இல் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத் தில் கேதுவும், 10 ஆம் இடத்தில் இராகுவும் வரப்போகின்றனர். இந்த மாற்றங்களின் அடிப்படையில் தான் ஆண்டு முழுவதும் உங்களுக்கு மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து கொண்டேயிருக்கும். உங்கள் சுய ஜாதகத்தில் வலிமையான திசாபுத்திகள் நடை பெறுமேயானால் வரும் மாற்றம்-வளர்ச்சியைக் அமைத்துக்கொள்வீர்கள்.

### கும்பச் சனி!

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் சனி சஞ்சரிக் கின்றார். கும்ப இராசி சனிக்குச் சொந்த வீடு என்பதாலும், அஷ்டமத்துச் சனி விலகியதாலும் நஷ்டமடைந்த தொழிலில் லாபம் கிடைக்கும். கஷ்டங்கள் விலகும். கவலைகள் பறந்தோடும். பெற்றோர் வழி உறவில் இருந்த விரிசல் மறையும். பிள்ளைகளுக்கு பெரிய இடத்து சம்பந்தங்கள் வரலாம். வியாபாரத்தில் அதிக அளவு வாடிக்கையாளர்கள் முன்பதிவு செய்து பொருட்களை பெற்றுக் கொள்ள முன்வருவர். இக்காலத்தில் விலகும் சனியை விரும்பிச்சென்று வழிபடுவது நல்லது. கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்ரம் பெறுகிறார். 24.8.2023-ல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் பெறுகின் றார். அங்கிருந்து மீண்டும் 20.12. 2023 இல் கும்ப இராசிக்கு முறை யாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். மகரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அஷ்டமத்துச் சனி உருவாகின்றது. எனவே இக்காலத்தில்

10 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குறைவான முதலீடு செய்து அதிக இலாபம் கிடைக்கும் விதத்தில் புதிய தொழில் ஒன்றை உருவாக்கி கொள்வீர்கள். வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு அதிகார வர்க்கத்தின் ஆதரவோடு புதிய பொறுப்புகளும், பதவி வாய்ப்புகளும் வந்து சேரும். சர்ப்பக்கிரக பெயர்ச்சிக் காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை அனுகூல நாளில் செய்தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களைத் தேடிவரும். சுகஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். தேக நலன் பாதிக்காமல் இருக்க உணவு வகையில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. பழைய வாகனங்களால் ஏற்படும் பழுது பார்க்கும் செலவை முன்னிட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்து விற்பனையில் ஒரு சிலர் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வீடு, இடம் வாங்குபவர்கள் பத்திரப் பதிவைச் சரிபார்த்து வாங்குவது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு!

இனிய காலமாக அமையும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும்பொழுது யோகத்தைக் கொடுக்கும். கருத்து மோதல்களால் காயம்பட்ட மனம் சீராகும். பொறுமையோடு செயற்பட்டதன் விளைவாகப் புதிய பாதை புலப்படும். கல்யாண மேளம் ஒலிக்கும். கனவுகள் அனைத்தும் பலிக்கும். அழியாத புகழுக்கு அஸ்திவாரம் அமைக்கும் விதத்தில் சில காரியம் நடைபெறும். "தொட்டிலில் பிள்ளை தவழவில்லையே" என்று வருத்தப்பட்ட தம்பதியருக்கு, வழிபட்ட தெய்வங்களால் வாரிசு உருவாகும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகளும் கிடைக்கும். அலுவலகம் சார்ந்த பயணங்களால் ஆதாயம் உண்டு. உச்சம் பெற்று நீங்கள் வாழவும், ஒளிமயமான எதிர்காலம் அமையவும் வழிபிறக்கும். 27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும் பிறகு 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலம் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும் காலமாகும். களைப்பின்றி உழைத்தால் தான் காரியங்களில் வெற்றி கிடைக்கும். இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தங்கள் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் உடன் பணிபுரிவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். இடமாற்றம் வந்தால் இன்முகத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 154



பிறகு வந்தியத் தேவனைப் பார்த்து, "அவன் எனக்கு இனித் தேவையில்லை. ஆனாலும் இரண்டு வார்த்தை அவனிடம் சொல்லி அனுப்புகிறேன். ஒரு வேளை, உம்மைத் தப்பித்து விடுவதற்கும் அவன் உபயோகமாயிருக்கலாம். சற்று நேரம் நீர் அதோ அந்தப் பக்கம் போய் இருட்டில் மறைந்து நில்லும்!" என்று முன்னம் அவளுடைய தாதிப் பெண் போன திசைக்கு நேர் எதிர்த் திசையைக் காட்டினாள்.

## முப்பத்தாறாம் அத்தியாயம் "ஞாபகம் இருக்கிறதா?"

லதா மண்டபத்தின் தோட்ட வாசலண்டை வந்து நின்று நந்தினி மூன்று தடவை கையைத் தட்டினாள். அப்போது அவள் முகத்தில் படிந்திருந்தது பயத்தின் ரேகையா அல்லது மரங்களின் இருண்ட நிழலா என்று சொல்ல முடியாது.

தோட்டத்தில் சிறிது தூரம் வரையில் பெரிய பெரிய அடி மரங்களும் அவற்றைச் சுற்றிக் கொண்டிருந்த கொடிகளும் தெரிந்தன. அப்பால் ஒரே இருட்பிழம்பாயிருந்தது.



இருளைக் கீறிக் கொண்டு, கொடிகளை விலக்கிக் கொண்டு, மரம் ஒன்றின் பின்னாலிருந்து மந்திரவாதி வெளியே வந்தான். நந்தினி தன்னுடைய புஷ்ப மஞ்சத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் அழகிய முகத்தில் இப் போது அமைதி குடி கொண்டிருந்தது. மந்திரவாதி லதா மண்டபத் துக்குள் நுழைந்தான். தங்க விளக்கின் சுடர் ஒளி அவன் முகத்தின் மீது விழுந்தது.

ஏற்கெனவே பார்த்த முகமாயிருக்கிறதே! யார் இவன்? ஆம்! திருப்புறம்பியம் பள்ளிப் படையினருகில் நள்ளிரவில் கூடியிருந்த மனிதர்களில் ஒருவன் இவன். பையிலிருந்து பொன் நாணயங்களைக் கலகலவென்று கொட்டியவன். "ஆழ்வார்க்கடியானைக் கண்ட இடத்தில் உடனே கொன்று விடுங்கள்!" என்று மற்றவர்களுக்குக் கூறிய ரவிதாசன்தான் இவன்.

வரும்போதே அவன் முகத்தில் கோபம் கொதித்தது. மலர்ப் படுக்கையில் சாந்த வடிவமாய் அமர்ந்திருந்த நந்தினியைக் கண்டதும் அவனுடைய பூனைக் கண்கள் வெறிக் கனல் வீசின. மஞ்சத்தின் எதிரில் கிடந்த பலகையில் உட்கார்ந்து கொண்டு நந்தினியை உற்றுப் பார்த்துக் கொண்டு "ஹூம் ஹ்ரீம் ஹ்ராம்! பகவதி! சக்தி! சண்டிகே சுவரி!" என்று சில மந்திரங்களைச் சொன்னான். "போதும்! நிறுத்து! தாதிப் பெண் வாசற்படியில் உட்கார்ந்தபடி தூங்கித் தொலைத்து விட்டாள் போலிருக்கிறது! சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்! 'அவர்' கோட்டைக்குள் வந்து விட்டார்!" என்றாள் நந்தினி.

"அடி பாதகி!" என்று ரவிதாசன் கூறியது, நாகபாம்பு சீறுவது போலத் தொனித்தது. "யாரைச் சொன்னாய்?" என்று நந்தினி சாந்தமாகவே கேட்டாள்.

"நன்றி கெட்ட நந்தினியைத்தான்! பழுவூர் இளையராணியைத்தான்! உன்னைத்தான்!" என்று ரவிதாசன் தன் ஒரு கை விரலால் அவளைச் சுட்டிக்காட்டினான். நந்தினி மௌனமாயிருந்தாள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்


## நாட்டுப்பற்று

முன்னொரு காலத்தில் மணிவர்மன் என்னும் மன்னர் மதுரையை சீரும் சிறப்புமாக ஆட்சிபுரிந்து வந்தார். அவனுடைய மனைவி ராணி பத்மாவதி மீது உயிரையே வைத்திருந்தார்.

அந்நாட்டு மக்கள் தங்கள் அரசனையும் அரசியையும் மிகவும் நேசித்தனர். எங்கும் பசுமையும் வளமையும் குடி கொண்ட அந்த நாட்டில் மக்களுக்கு எந்த ஒரு குறையும் வைக்காமல் மன்னன் ஆட்சி செய்து வந்தார்.

மக்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அரசன், அரசி இருவருக்கும் மனதுக்குள் ஒரு பெரும் குறை இருந்தது. திருமணமாகி, பல ஆண்டுகள் ஆகியும் தங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதுதான் அது.

எதிர்காலத்தில் தங்கள் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என மக்களும் மிகவும் கவலைப்பட்டார்கள். ராணி கலங்கும்போதெல்லாம் மன்னன் அவரை சமாதானம் செய்துவந்தார்.



ஒரு நாள் மதுரை மாநகருக்கு முனிவர் ஒருவர் விஜயம் செய்தார். மன்னரும் மகாராணியும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தனர். முனிவரின் காலில் விழுந்து வணங்கி, தங்கள் குறையை அவரிடம் தெரிவித்தனர்.

முனிவர் மன்னரை நோக்கி, இந் நாட்டு மக்களில் யாராவது ஒரு தாய், தான் பெற்ற ஒரே குழந்தையை வைகைநதிக்கு அர்ப்பணித்தால் உனக்குக் குழந்தை பிறக்கும்" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மன்னரும் ராணியும் அதிர்ச்சி அடைந்தனர். எந்த ஒரு தாயும் இதற்கு ஒத்துக்கொள்வது என்பது இயலாத காரியம் என்று நினைத்து இருவரும் தயங்கினர். முனிவரும் "இதைத் தவிர வேறு வழியில்லை' என்று கூறி அங்கிருந்து சென்றார்.

மன்னர் அமைச்சரை நோக்கி, யாரேனும் ஒரு தாய்; தான் பெற்ற ஒரே குழந்தையை வைகை நதிக்கு அர்ப்பணித்தால், நாட்டில் பாதி பரிசாக அளிக்கப்படும்" என்று முரசு அறிவிக்கச் சொன்னார்.

நாடெங்கும் முரசு அறிவிக்கப்பட்டது. ஆயினும் மக்களில் எந்தத் தாயும் தங்களுடைய குழந்தையை ஆற்றில் விடுவதற்கு முன்வரவில்லை. நாட்கள் பல கடந்தன. அரசனும் அரசியும் மிகவும் சோர்ந்து போயினர்.

அரசனின் உடல்நிலை இக் கவலையால் மிகவும் பாதிக்கப்பட்டது. அரசனும் அரசியும் கவலைப்படுவதை அரசனின் மெய்க்காப்பாளன் வேலப்பனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுக்கு ஓர் ஆண்குழந்தை இருந்தது. பிறந்து ஒரு வருடமே ஆகியிருந்த அக் குழந்தையை வேலப்பனும் அவனது மனைவி ரத்னாவும் மிகவும் நேசித்தனர்.

சில நாட்கள் சென்றன. கவலையினால் மன்னர் நோயுற்று, படுத்த படுக்கையானார். அரசன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்த வேலப்பனால் இந்தத் துயரைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. ஒரு குழந்தையின்றி, மன்னர் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்காமல் ஒரு முடிவுக்கு வந்தான். வீட்டுக்குச் சென்று தன் மனைவி ரத்னாவை அழைத்தான்.

"குழந்தையில்லாத ஏக்கத்தில் நம் மன்னர் இறந்து விட்டால், பின்னர் நம் நாடு, சரியான தலைமையில்லாமல் பகைவர்களின் கையில் சிக்கி, அடிமையாகிவிடும்" என்றான்.

"அதற்கு நாம் என்ன செய்வது?" என்றாள் ரத்னா.

"நம் நாட்டைக் காப்பாற்ற நாம் ஒரு தியாகம் செய்ய வேண்டும். நமது குழந்தையை வைகை ஆற்றுக்கு அர்ப்பணிக்க வேண்டும்" என்றான்.

ரத்னா இதைக் கேட்டதும் அதிர்ச்சியில் மயங்கும் நிலைக்குச் சென்றாள். குழந்தையைப் பிரிவது அதுவும் ஆற்றில் விடுவது என்பதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. ஆயினும்குழந்தையை விட நாடும், மன்னரும் மிக முக்கியம் என்பதைப்பலவாறு தன்மனைவியிடம் எடுத்துச் சொன்னான் வேலப்பன். (தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

*– கோன்பு தஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அம்மன் சிலையை பாதுகாக்க சட்டத்தரணிகள் அணிதிரள வேண்டும்

தீவகத்தின் நுழைவாயிலாய் அமைந்த யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில் நாகபூசணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் (14.04.2023) பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றும் பொருட்டு யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்ப்பாண நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த அம்மன் சிலை அனுமதி பெறப்படாமல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதென்ற அடிப்படையிலும் இச் சிலையானது எதிர்காலத்தில் மத ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்ற ஊகத்தின் அடிப்படையிலும் இச்சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டுமென்பது பொலிஸாரின் நிலைப்பாடாக உள்ளது.

பொலிஸார் முன்வைத்த மனுவில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையானவையாக இருப்பின், புனித அந்தோனியார் தேவாலயம் இருக்கும் கச்சதீவில் கடற்படையினர் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்தபோது அந்தச் சிலை மத முரண்பாடுகளை ஏற்படுத்தும் எனப் பொலிஸார் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யாதது ஏன்?

தவிர, நீதிமன்ற உத்தரவுகளை மீறி குருந்தூர்மலையில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதை பொலிஸார் தடுத்து நிறுத்தாததன் காரணம் யாது?

இலங்கைப் பொலிஸார் சிங்கள மக்களுக்கானவர்களா? அல்லது இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்குமானவர்களா என்பது தான் புரியவில்லை.

ஆம், இலங்கைப் பொலிஸார் சட்டரீதியாகச் செயற்படுவதாக இருந்தால், இன மத மொழிப் பேதமின்றி அதனைச் செய்ய வேண்டும்.

இதைவிடுத்து சிங்கள மக்கள் என்றால் அதனை ஒருவிதமாகவும் தமிழ் மக்கள் என்றால் அதனை வேறொருவிதமாகவும் கையாள்வது எந்தவகையிலும் நியாயமாகாது.

யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் சிலை என்பது நயினாதீவின் நுழைவாயிலைக் குறித்து நிற்கும் ஓர் அடையாளம்.

தமிழ் மக்களின் வழிபடு தெய்வமாக இருக்கக்கூடிய நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றெனப் போற்றப்படுவது.

வரலாற்றுத் தொன்மைமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நுழைவாயிலாக இருக்கும் பண்ணைக் கடலோரத்தில் நாகபூசணி அம்மன் சிலையைப் பிரதிஷ்டை செய்வதற்குக் கூட நம் தமிழ் மக்களால் முடியாதெனும்போது, எங்களுக்கான உரிமை என்பது எங்ஙனம் சாத்தியமாகும்.

ஆக அம்மன் சிலையை அகற்றுவதற்குக் கட்டளை இடுமாறு கோருகின்ற யாழ்ப்பாணப் பொலிஸாரின் மனு நாளை (18.04.2023) யாழ்ப்பாண நீதிமன்றில் விசாரணைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் நாகபூசணி அம்மன் சிலையை தொடர்ந்தும் அதே இடத்தில் பாதுகாப்பதற்கு நம் தமிழ்ச் சட்டத்தரணிகள் சமய பேதம் கடந்து தமிழ் இனத்தின் பேரால் ஒன்றாக அணிதிரள வேண்டும் என்பதுதான் நம் தமிழ் மக்களின் வேணவா.

# மக்கள் ஆணை இல்லாத அரசுடன் ஒப்பந்தங்கள் செய்வதில் பயனில்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் ஆணை இல்லாத அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை செய்வதில் எந்த பயனும் இல்லை எனவும் அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் இரகசிய பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் ஐ.எம்.எப் ஒப்பந்தத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அதனை விவாதிக்காமல் ஒப்பந்தங்களை செய்ய முடியாது என்றும் வெளிநாடுகள் உதவி செய்தாலும் அல்லது சர்வதேச நாணய நிதியம் உதவி செய்தாலும் அவை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மக்கள் ஆணை உள்ள அரசாங்கத்துடன் செய்யப்பட்டாலே அது நிரந்தரமானதாக இருக்கும் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மின்னல் தாக்கி சிறுவன் பலி

(கொழும்பு)

ருவன்வெல்ல பகுதியில் மின்னல் தாக்கி 12 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரண்டு சிறுவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ருவன்வெல்ல மாப்பிட்டிகம பகுதியிலுள்ள களனி ஆற்றில் நீராடிவிட்டு வீடு திரும்பிய ஒரு குழுவினரே இந்த அனர்த்தத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ருவன்வெல்ல பகுதியைச் சேர்ந்த சிறுவன் மின்னல் தாக்கி உயிரிழந்ததுடன், காயமடைந்த ஏனையவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைவு அவசியம்

## வேலன் சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைவு என்பதே இன்றைய காலத்தில் அவசியமானதென வேலன் சுவாமிகள் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் மரபுரிமையைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் அண்மைக் காலமாக தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றுவரும் மரபுரிமை மற்றும் தொல்லியல் அடக்குமுறைகளைக் கண்டித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் ஒழுங்கமைக்கப்பட்ட அடையாள உண்ணா விரதப் போராட்டமானது நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டு மாலை 3 மணியளவில் நிறைவடைந்தது.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரச இயந்திரத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதற்காக திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் முன்னெடுக்கப்படுவதாகவும் நீதிக்கு புறம்பாக அடாத்தான செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதாகவும் வேலன் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக சிங்கள பேரினவாதம் திட்டமிட்ட இனப்பரம்பலையும் முன்னெடுப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்றைய காலத்தில் கூட மதவாதத்தினாலும் பிரதேச வாதத்தின் ஊடாகவும் சாதிய வாதத்தின் ஊடாகவும் தமிழர்களின் ஒன்றுமைகள் உடைக்கப்படுவதாகவும் வேலன் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் விபத்தில் காயம்

(கொழும்பு)

கேகாலை, அவிசாவளை பிரதான வீதியின் ருவன்வெல்ல, வெந்தல பிரதேசத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பயணித்த சொகுசு ஜீப் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது இராஜாங்க அமைச்சர் உட்பட 5 பேர் வாகனத்தில் இருந்தனர்.

இந்த விபத்தில் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிறு காயம் காரணமாக இராஜாங்க அமைச்சர் தற்போது கரவனெல்ல ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஜீப் வீதியை விட்டு விலகி சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை, கேகாலை மாவட்டத்தின் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முதற்கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலம் தாழிறங்கல், கற்பாறை சரிதல், மண்மேடு சரிதல், நிலத்தில் வெடிப்பு ஏற்படுதல் உள்ளிட்டவை தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

# அம்பாறையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை - நிந்தவூர், மாட்டுப்பளை பிரதான வீதியில் மாட்டு வண்டியுடன் உந்துருளி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதுடன், உந்துருளியில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உந்துருளிக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், முன்புற சக்கரம் கழன்று சென்றுள்ளது. வண்டியின் மாட்டினது கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சாய்ந்தமருது 12 ஐச் சேர்ந்த ஜமால்தீன் ஹாறூன் (42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துக் குறித்து நிந்தவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க மின்சார ரயில்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காகவும், சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்குடனும் நானுஓயா முதல் நுவரெலியா ஊடாக உடபுஸல்லாவ வரை மின்சார ரயில்பாதையை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இத்திட்டமானது இயக்க மற்றும் பரிமாற்றம் (BOT) முறையின் கீழ் நிர்மாணிக்கப்படும் என்றும், அதற்கு பொருத்தமான முதலீட்டாளர் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவித்தார்.

உலகின் ஆறாவது உயரமான புகையிரத நிலையமான கந்தபொல புகையிரத நிலையம் உட்பட பல புகையிரத நிலையங்களை உள்ளடக்கியதாக இந்த புகையிரத பாதை அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் இதனூடாக சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு பாரிய வசதிகள் உள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதற்கமைய, பல புதிய ரயில் நிலையங்களை உள்ளடக்கி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

02


### பாக்குவிரிகுடா

பாக்குவிரிகுடா என்பது இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரைக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு அரை மூடிய ஆழமற்ற நீர்நிலையாகும். அதிகபட்சமாக 13 மீ ஆழம் உள்ளது.பாக்குவிரிகுடா 8° 50' வடக்கு மற்றும் 10° வடக்கு சமாந்தரக் கோடுகளுக்கும் (அட்ச ரேகைகள்) மற்றும் 78° 50' கிழக்கு மற்றும் 80° 30' கிழக்கு நெடுங்கோடுகளுக்கும் (தீர்க்கரேகைகளுக்கும்) இடையே அமைந்துள்ள பகுதியாகும். பாக்குவிரிகுடாவின் அகலம் 57 முதல் 107 கி.மீவரை உள்ளது.மற்றும் நீளம் சுமார் 150 கி.மீ ஆகும்.

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லை நான்கு வெவ்வேறு கடல்பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை வடக்கில் வங்காளவிரிகுடா, அடுத்து பாக்குநீரிணை, நடுவில் பாக்கு விரிகுடா தெற்கில் மன்னார்வளைகுடா என்பனவாகும்**

### மன்னார் வளைகுடா

மன்னார் வளைகுடா என்பது இந்தியப் பெருங்கடலில் இலட்சத் தீவுக் கடலின் பகுதியில் அமைந்துள்ள ஒரு குடா ஆகும். இது இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இலங்கையின் மேற்குக்கரைக்கும் இடையில் 160 முதல் 200 கிலோமீற்றர் (100 முதல் 125 மைல்) அகல இடத்தில் அமைந்துள்ளது.




பாக்கு விரிகுடாவை மன்னார் வளைகுடாவில் இருந்து பிரிக்கும் ஆதாமின் பாலம்

தாழ் தீவுகளையும் கற்பாறைகளையும் கொண்ட இராமர்பாலம் மன்னார் வளைகுடாவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ள பாக்குவிரிகுடாவில் இருந்து பிரிக்கிறது. தென்னிந்தியாவில் உள்ள தாமிரபரணி ஆறும் இலங்கையில் உள்ள அருவி ஆறும் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.


560 சதுரகி.மீ பரப்பில் அமைந்துள்ள மன்னார் வளைகுடா தேசிய பூங்காவில் 0.25 ஹெக்டயர்முதல் 125 ஹெக்டயர் அளவிலான 21 தீவுகள் அமைந்துள்ளன. இந்தத் தீவுகளை சுற்றிலும் மீன்களின் இருப்பிடமாகத் திகழும் பவளப்பாறைகள் அதிகளவில் காணப்படுகின்றன. 104 வகை கடின பவளப்பாறைகள் மன்னார் வளைகுடாபகுதியில் காணப்படுகின்றன.

### கச்சதீவு

கி.பி. 1400 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக இராமேஸ்வரம் தீவும் அதைச் சுற்றி 11 தீவுகளும் தோன்றியுள்ளன என்றும் அதில் ஒன்றுதான் கச்சதீவு என்றும் இத் தீவுகள் தமிழகத்தின் நிலப்பரப்பில் இருந்து தான் துண்டிக்கப்பட்டன என்றும் இராமநாதபுரம் மாவட்ட அரசு வரலாற்றுக் குறிப்பு கூறுவதாக ஒரு கதை உண்டு. இது கிழக்கு மேற்காக ஒரு மைல் தூரமும் (1.6 கி.மீ) வடக்கு தெற்காக அரை மைல் தூரமும் (0.8 கி.மீ) கொண்டது. இதன் பரப்பளவு 285 ஏக்கராகும். கச்சன்- கச்சம் என கடல் ஆமையை அழைப்பார்கள். இந்தத் தீவில் ஒரு காலத்தில் ஆமைகள் அதிக அளவில் வசித்ததால் இதைக் கச்சதீவு என்று அழைக்கின்றனர்.

கச்சதீவு இந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து 12 கடல் மைல் தொலைவிலும் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவிலிருந்து 10.5 கடல் மைல் தொலைவிலும் பாக்கு நீரிணைப்பகுதியில் அமைந்திருக்கும் ஒரு மிகச் சிறிய தீவாகும். இத் தூரங்கள் வெவ்வேறு நூல்களில் வெவ்வேறாகக் கூறப்படுகிறது. இந்திய நூல்களில் இராமேஸ்வரம் தான் கச்சதீவுக்கு கிட்ட உள்ளது என்று கூறப்படுவதைக் காணலாம். இத்தீவை பிரித்தானிய ஆட்சியின் போது இந்தியாவும் இலங்கையும் இணைந்து நிர்வகித்தன.

கச்சதீன் இருப்பிடம்




இத்தீவின் பெயர்சங்க இலக்கிய காலம் முதல் உள்ள ஒருபெயரின் திரிபாகவும் கருதப்படுகிறது. இத் தீவு தொழில் பெயரினால் அழைக்கபட்டது. கைசால், கைச்சால் என்பதே இத்தீவின்உண்மைபெயர். இத் தீவு தான் மருவிகச்சால் தீவு என்றும் இன்று இறுதியில் கச்சா, கச்சைதீவு என்று அழைக்கபடுகின்றது என்றும் கூறப்படுகிறது.

கச்சால் என்றால் மீன்பிடிக்கும் ஒரு வகை கைவலைக் கூண்டு, சால் என்பது வலை கை + சால் என்பதே கைச்சால் என்பதே கைச்சால். அதுவே கச்சால் என்று சொல்லப்படும். இன்றும் திருகோணமலை பகுதி மீனவர்கள் கோலா என்னும் பறக்கும் மீன்களை அள்ளும் வலையை கைச்சால் என்று அழைப்பார்கள். ஆக இத்தீவை தமிழர் நாம் சரியாக கைசால் தீவு என்று தான் சொல்ல வேண்டும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் இங்கு பச்சை ஆமைகள் இருந்த காரணத்தினால் பச்சை தீவு என அழைக்கப்பட்டது. இது பின்னர் மருவி கச்சைதீவு என அழைக்கப்படலாயிற்று என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

இவ்வகை ஆமைகளின் ஓட்டின் கீழ்ப்புறம் பச்சை நிறக்கொழுப்புப்பகுதி இருப்பதால், இதற்கு பச்சை ஆமை என்று பெயர். சாதாரண ஆமைகளைப் போல தலையை உள் இழுத்துக் கொள்ளும் திறன் பச்சை ஆமைகளுக்கு இல்லை.

இந்த தீவில் குடிக்க கிடைக்கும் தண்ணீர் கசப்பாக இருப்பதால் தான் இத் தீவிற்கு கச்சதீவு என்ற பெயர் வந்தது என்போரும் உள்ளனர். இங்கு கிடைக்கும் தண்ணீர் கசப்பாக இருப்பதற்குக் காரணம் இங்கே விளையும் பல்வேறு மூலிகைகள்,பச்சிலைகள் மற்றும் சாயவேர்கள் என்கின்றனர்.

சித்த மருத்துவத்துக்கு தேவையான அநேக மூலிகைச் செடிகளை இங்கு பெற்றுக் கொள்ள முடிந்ததாகவும் இதில் "உமிரி" என்னும் மூலிகை, நோய்களுக்கு சிறந்த நிவாரணி உமிரிகீரை நீர்பிடிப்பான தாவரம் . கடல்நீரில் இருக்கும் உப்பை நீக்கிதன்னுள் நன்னீரை பிடித்து வைத்திருக்கும் அற்புத தாவரம் என்றும் கூறப்படுகிறது.

அக்காலத்தில் கச்சை தீவை சுற்றியுள்ள கடலில் சங்கு குளித்தனர். இதனால் இத்தீவுக்கு சங்கு புட்டித்தீவு,சங்குபுட்டித்தீடை என்ற புனைப்பெயர்களும் உண்டு என்றும் அறியப்படுகிறது. மேலும் கச்சைத்தீவுக் கடலில்விலையுயர்ந்த இறால் வகைகள் கிடைக்கும்.

1170 ஆம் ஆண்டில் பொலநறுவை மன்னன் நிஸங்கமல்லனால் இராமேஸ்வரம், ராமநாத சுவாமிக்கு சாசனமாக ஒப்படைக்கப்பட்டதுதான் கச்சத்தீவு என்பதற்குச் சான்றாக கல்வெட்டு உள்ளதாகக் கூறப்படுகிறது. சிங்கள மன்னன் புத்தமதத்தை பின்பற்றினாலும் ராமநாதபுரம் கோயிலுக்கு சில திருப்பணிகள் செய்துள்ளான் என்பது சிலரின் கருத்தாகும்.

அந்தக் காலகட்டங்களில் ராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காக நெடுந்தீவில் இருந்து பாலும் கச்சத்தீவில் இருந்து பூக்களும் கொண்டு வரப்பட்டன. பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் ராமநாதசுவாமிக்கு என கச்சத்தீவில் மிகப் பெரிய பூந்தோட்டம் இருந்தது. அதை அழித்தவர்கள் போரத்துக்கேயர்கள். இவ்வாறும் கூறப்படுகிறது.

கச்சதீவானது, 79° 31' கிழக்கு நெடுங்கோட்டிலும், 9° 23' வடக்கு அகலக்கோட்டிலும் அமைந்துள்ளது. இத் தீவின் மேற்கே உயர்ந்த பாறைகள் தெரியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயல் காவலுக்கு...

இளைஞன் ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு தனது வயலுக்கு காவலுக்கு சென்றுள்ளார்.

நேற்றுக் காலை விடிந்தும் குறித்த இளைஞன் வீடு திரும்பாமையால் அவரது குடும்பத்தினர் குறித்த இளைஞனைத் தேடிச்சென்றபோது வயற் பகுதியில் இளைஞன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஜெகநாதன் கேஜிதன் என்பவராவார்.

குறித்த இளைஞனின் மரணம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## மாணவன்...

அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருவேறு பிரபல பாடசாலை மாணவர்கள் இருவருக்கு இடையில் கடந்த சில நாட்களாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இரு மாணவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்ட நிலையில் மாணவன் ஒருவரின் பெற்றோர் தலையிட்டு சமரசப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர்.

இதன்பின் நேற்று முன்தினம் மாலை வவுனியா வேப்பங்குளம், 60 ஏக்கர் பகுதியில் உள்ள மாணவனின் வீட்டுக்குள் புகுந்த மற்றைய மாணவன் உள்ளிட்டோர் குறித்த வீட்டில் வசித்த மாணவன் மீது தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதனால் காயமடைந்த 16 வயது மாணவன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த இரு பகுதியினரும் 16 தொடக்கம் 17 வயதான மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வவுனியாவில்...

சைக்கிள் பட்டா ரக வாகனத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்ததுடன் அவரது மனைவி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,250)

## நடப்பு அரசின்...

தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சலுகைகள் மற்றும் அமைச்சுப் பதவிகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், தற்போதைய அரசாங்கத்தில் இணையவுள்ளதாக அரசாங்கத் தரப்பினர் பரப்பும் போலியான தகவல்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் முன்னர் இருந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தொடர்ச்சியாக கருதப்படும் தற்போதைய அரசாங்கம், கடந்த அரசாங்கத்தை விட மோசமான பாதாளத்திற்கு நாட்டைத் தள்ளுவதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், விரைவில் இந்த அரசாங்கத்தின் தோல்வி அம்பலமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எச்சரித்துள்ளார்.

தேர்தலின்றி எமது நாட்டை இந்த துரதிர்ஷ்டமான நிலையில் இருந்து மீட்க முடியாது என்பதை தாம் உறுதியாக நம்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பாடசாலைகள்...

முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்படவுள்ளது.

இதன்னால் இடை நிலை வகுப்புகளுக்கான அனுமதி கடிதங்கள் அமைச்சினால் வழங்கப்படாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## நல்லை ஆதீனத்...

சிலை தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று இன்று (17.04.2023) மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன சுவாமிகள் தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் அனைத்து இந்து சமய அமைப்புகள், ஆலய அறங்காவலர்கள் சைவ அபிமானிகள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாகபூசணி...

துடன், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வழக்கு இலக்கம் குறிப்பிட்டு பொலிஸாரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2023.04.15ஆம் திகதி யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் பரிசோதகரினால் யாழ்.பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் ஊர்காவற்றுறை வீதியில் எவ்வித அனுமதியுமின்றி சட்டத்திற்கு புறம்பாக இனந்தெரியாத நபர்கள் மூலம் பார்வதி அம்மன் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் இன, மத, சமூக உடன்பாடுகளுக்கு விளைவுகள் ஏற்படும் நிலை உருவாகி சமாதான சீர்குலைவு ஏற்பட வாய்ப்புள்ளதென அறிக்கை செய்து அந்தச் சிலையினை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி சபையின் அதிகாரிக்கு கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சிலையினை உரிய அனுமதி பெற்று அமைத்து இருப்பின் அவ் அனுமதியுடன் அல்லது உருவாக்கிய நபர்கள் யாரேனும் இருந்தால் அல்லது இந்தச் சிலையினை உரிமை கோரும் யாராவது இருந்தால் 18.04.2023ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு சமுகமளித்து உரிமை கோருமாறும் மன்று கட்டளையிடுவதுடன் இதன் உரிமையினை கோருவதற்கு தவறும் பட்சத்தில் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் இந்தச் சிலை அகற்றப்படும் என இத்தால் அறியத் தருகின்றேன் என்றுள்ளது.

நயினாதீவ நாகபூசணி அம்மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் திருவுருவச் சிலைக்கு தமிழ் புதுவருடப் பிறப்பில் பால் அபிசேகம் உருத்திர சேனை அமைப்பினால் செய்யப்பட்டது.

இந்த நிலையில் உருத்திர சேனை அமைப்பின் தலைவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு 3 மணி நேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

உருவச் சிலையை அமைத்தவர்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரியாது என்றும் தாம் பால் அபிசேகம் செய்ததாகவும் உருத்திர சேனை அமைப்பின் தலைவர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்தார். (ம-7,33)

ஒரு இலட்சம் குரங்குகளை

# சீனாவுக்கு வழங்குவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை

### விவசாயத்துறை அமைச்சு

(கொழும்பு)

சீனாவுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குவது தொடர்பில் உறுதியான இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. மேற்பார்வை குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய சிறந்த தீர்மானம் எடுக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

சீனாவில் உள்ள மிருகக்காட்சிசாலைக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழு கோரிக்கை விடுத்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் அண்மையில் குறிப்பிட்டார்.

சீனாவுக்கு குரங்குகளை வழங்குவது தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்கள் வெளியாகின.

இலங்கைக்கே உரித்தான குரங்குகளை பிற நாட்டுக்கு வழங்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என சுற்றாடற்துறை ஆய்வாளர்கள் விவசாயத்துறை மற்றும் வனஜீவராசிகள் அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து சீனாவுக்கு குரங்குகளை வழங்குவது தொடர்பில் ஆராய நீதியமைச்சு, விவசாயத்துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஆகிய நான்கு அமைச்சுக்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் மேற்பார்வை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குவது தொடர்பில் இதுவரை உறுதியான இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. மேற்பார்வை குழுவின் பரிந்துரைக்கு அமைய இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(ம-7)

குரங்குகளை மட்டுமன்றி

# மயில்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும் - பாலித

(கொழும்பு)

குரங்குகள் மட்டுமன்றி மயில்களும் பயிர்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்துகின்றன. எனவே குரங்குகளை மட்டுமல்ல மயில்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.



சீனாவுக்கு செங்குரங்குகளை ஏற்றுமதி செய்யும் யோசனை குறித்து புத்தாண்டு விழா ஒன்றில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்பட செங்குரங்குகளை ஏற்றுமதி செய்வதை எதிர்க்கும் தரப்பினர், வண்ணாத்திவில்லு, ஆனமடுவ, அனுராதபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று தோட்டங்களுக்கு இந்த குரங்குகள் மற்றும் மயில்களால் ஏற்படும் பாதிப்பினால், விவசாய சமூகம் அனுபவிக்கும் இழப்பையும் காண வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

"அரசாங்கம் ஏதாவது செய்ய முடிவு செய்யும் போதெல்லாம் எப்போதும் சில அரசியல் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும் அரக்கர்களை உருவாக்குகிறார்கள். இப்போது சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் அரக்கர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்" என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வடக்குக்...

முல்லைத்தீவு, குருநாகல், மன்னார், மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வெப்பச் சுட்டெண் குறிப்பிடத்தக்க அளவில் தொடரும் என வானிலை அறிக்கை தெரிவிக்கிறது.

எனினும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் பொதுமக்கள் பகலில் வெளியில் நேரத்தை செலவிடும் போது அதிக தண்ணீர் மற்றும் அதிகப்படியான திரவங்களை அருந்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## அம்மன் சிலையை...

சிலையானது மத முரண்பாட்டை ஏற்படுத்தும் எனக்கூறி, அதனை அங்கிருந்து அகற்றுவதற்குக் கட்டளையிடுமாறு கோரும் மனுவொன்றை நேற்று முன்தினம் (15) யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இதனையடுத்து பிரஸ்தாப மனு மீதான விசாரணை நாளை 18ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி ஆலயத்துக்கு அண்மையாக கிறிஸ்தவ சபைக்கு புதிய கட்டடம்

## பல தரப்புக்களால் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மையாக கிருஸ்தவ சபை ஒன்றினால் அமைக்கப்படும் கட்டடம் தொடர்பில் பல தரப்பட்டவர்களினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்பாக மேற்படி கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதே அதனை அமைப்பதற்கான அனுமதியை இரத்துச் செய்யுமாறு செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் கோப்பாய் பிரதேச செயலாளரிடம் எழுத்துமூலம் கோரியிருந்தது.

அத்துடன், வலி.கிழக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலும் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மையாக அனுமதி பெற்றுக்கொள்ளாது மதத்தைப் பரப்பும் நோக்கோடு கட்டடம் ஒன்று அமைவதாகவும் அதுதொடர்பில் சபை முறையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.



சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான இந்தச் செயற்பாடு தடுக்கப்பட வேண்டும் எனவும் கட்டட அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதா? என்பதன் ஊடாக அதனை அணுகுவது சிறந்தது என வலி.கிழக்கு பிரதேச சபையின் அப்போதைய தவிசாளர் நிரோஷ் சபைக்கு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த கிறிஸ்தவ சபையினால் கட்டடம் அமைக்கும் பணி நிறைவு பெற்று வருகின்றது.

அந்தப் பிரதேசத்தில் வாழும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் குழப்பமின்றி வாழ்வதற்கு அந்த இடத்தில் கட்டடத்தை அமைப்பதைத் தடுக்குமாறு செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் கோப்பாய் பிரதேச செயலாளரிடம் கேட்டிருந்தது.

எனினும் எந்தவொரு தரப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று செல்வச்சந்நிதி நிர்வாகம் தனது விசனத்தை வெளியிட்டுள்ளது.

அண்மைய நாட்களாக மதமாற்ற அமைப்புகள் தொடர்பில் பல்வேறு குழப்பமான சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த விடயத்தில் உரிய கருசனை கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ம-7,33)

**IELTS** - New Batch ஆரம்பம்
Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
(15285)
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**மணமகன் தேவை**
1995 இல் பிறந்த, சமயம் RC கத்தோலிக்கம், படிப்பு - A/L, அழகுக்கலை
எதிர்பார்ப்பு - வெளிநாடு மட்டும்
தொடர்புகளுக்கு
(15269)
077 325 7837

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள்
(ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6369)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
(C-6369)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15233)
076 825 7716 (ஆகாஸ்)

**வீடு வாடகைக்கு உண்டு**
ஊரெழுவில் பலாலி பிரதான வீதியில் இருந்து 75m தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
குடும்பமாக வசிக்க/ NGO /வியாபார நிறுவனங்களுக்கு பொருத்தமானது.
தொடர்புகளுக்கு :
(15275)
077 310 1357

**பராமரிப்பாளர் தேவை**
கோப்பாய் பகுதியிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிக்கக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.
இலவச உணவு மற்றும் தங்குமிடத்துடன் கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
(15275)
077 310 1357

நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?
இன்றே பாவியுங்கள்.
**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**
ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.
யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
சந்தைப்படுத்துவோர் :
Manufactured By: சிவா நறுமணப் பூங்கா ®
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(C-6367) (குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.
(15282)
077 076 0389
076 911 9371
076 739 0412

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)
- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15282)
076 733 6047
076 333 6079
076 733 6093

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.